# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 16, 2023 Weekly E-paper ● September 16 2023





## ஜி 20 மாநாடும், இம்சை அரசன் 23ஆம் புலிகேசியும்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## பா.ஜ.க. ஆட்சி ‘ஸ்வாஹா’

தலையங்கம்

## நீட் இந்திய மாணவர்களின் பிரச்சனை!

பேராசிரியர் புருனோ சந்திரசேகர்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 16, 2023 Weekly E-paper ● September 16 2023

# அண்ணாவின் கால் தூசி அண்ணாமலை!

**சுப. வீரபாண்டியன்**

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15 இல், அவரைப் பற்றிய அவதூறு ஒன்றை அள்ளிவிட்டு இருக்கிறார் அண்ணாமலை.

1956 ஆம் ஆண்டு மதுரையில் நடந்த விழா ஒன்றில், பகுத்தறிவுக் கருத்துகளைப் பேசிய அறிஞர் அண்ணாவை, அடுத்த நாள் அதே மேடையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மிகக் கடுமையான சொற்களால் சாடியதாகவும், மன்னிப்பு கேட்கவில்லை என்றால் மீனாட்சி அம்மனுக்குப் பால் அபிஷேகத்திற்குப் பதிலாக இரத்த அபிஷேகம் நடக்கும் என்று சொன்னதாகவும், அதற்குப் பயந்து அண்ணாவும், பி.டி. ராஜனும் ஓடிவந்து மன்னிப்பு கேட்டனர் என்றும் அண்ணாமலை அவதூறு பரப்பி இருக்கிறார்!

இந்தப் பொய்ச் செய்தி இரண்டு தலைவர்களுக்குமே பெருமை சேர்க்காது! ஒருவர் வன்முறையாளர் என்பதாகவும்,





இன்னொருவர் கோழை என்பதாகவும்தான் இதற்குப் பொருள். அண்ணாமலை சொன்ன இந்தச் செய்தியில் பாதி உண்மை, மீதி அபாண்டம்!

மதுரையில் நடைபெற்ற விழாவில் அண்ணா பகுத்தறிவுச் செய்தியை பேசியதும், அதனை முத்துராமலிங்கத் தேவர் மறுநாள் கடுமையாக ஏசியதும் உண்மைதான். ஆனால் அண்ணா மன்னிப்பு கேட்கவும் இல்லை, தேவர் அதனைக் கோரவும் இல்லை.

ஆனாலும் வேறொன்று நடந்தது. தேவரின் பேச்சால் கோபம் கொண்ட திமுகவினர், அடுத்த வாரமே அண்ணாவை அழைத்து வந்து மதுரையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதில் பேசிய அண்ணா, தன் உரையின் இறுதியில், மிகுந்த கண்ணியத்தோடு "நான் மதிக்கும் தலைவர் ஒருவர், என்னைப்பற்றி அப்படிப் பேசி இருப்பது அவர் தரத்திற்கு உரியதில்லை. அதற்கு எதிர்வினை ஆற்றுகிற முறையில் , நானும் கடுமையான சொற்களைக் கூறுவது என் தரத்திற்கு உரியதில்லை" என்று சொல்லி முடித்து விட்டார். அண்ணா மறுமொழி ஆற்றிய அந்தக் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான பார்வையாளர்களில் ஒருவராய் இருந்து அந்த உரையை நேரில் கேட்டவர், என் அப்பா காரைக்குடி இராம. சுப்பையா. அவர் சொல்லித்தான் இந்தச் செய்தியை நான் அறிந்தேன்.

அண்ணா மன்னிப்பு கேட்ட அந்தச் செய்தி, அண்ணாமலை படித்திருக்கும் 20000 புத்தகங்களில் எந்தப் புத்தகத்தில், எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அவர் எடுத்துக்காட்டட்டும். இல்லையானால் நாளையே அவர் மன்னிப்பு கோர வேண்டும்.

அண்ணாவின் கால் தூசிக்கும் ஈடாகாத அண்ணாமலை போன்றவர்கள், அவரைப் பற்றி அவதூறு பரப்புவதை நிறுத்தாவிட்டால், திமுக தோழர்கள் மட்டுமின்றி, அண்ணாவின் பெயரால் கட்சி நடத்தும் அதிமுகவினரும் பொங்கி எழுவார்கள் என்று நாம் நம்புவோம்!

# ஜி 20 மாநாடும், இம்சை அரசன் 23ஆம் புலிகேசியும்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

உலக அளவில் பொருளாதாரத்தில் சிறப்பாகச் செயலாற்றும் 20 நாடுகள் இணைந்து ஜி20 என்ற பெயரில் கூட்டமைப்பு உருவாக்கிப் பணியாற்றி வருகின்றன. இந்தக் கூட்டமைப்பின் மாநாடு ஒவ்வொர் ஆண்டும் ஒவ்வொரு நாட்டில் நடப்பது வழக்கம். அதன்படி இந்தாண்டிற்கான மாநாடு “ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்” என்ற தலைப்பில் இந்தியாவின் தலைமையில் 09.09.2023 மற்றும் 10.09.2023 அன்று தலைநகர் டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஜி20 அமைப்பின் நிரந்தர உறுப்பினராக ஆப்பிரிக்க யூனியன் இணைந்ததன் மூலAம் ஜி20 அமைப்பு இனி ஜி21 அமைப்பாக மாறுகிறது.

இந்தியப் பிரதமர் மோடி ஜி20 மாநாடு நடைபெறும் பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒடிசாவின் கோனார்க் சக்கரத்தின் முன்பு நின்று மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்களை வரவேற்றார். அதில் “இந்தியா” என்று பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜி20 மாநாட்டில் நாட்டின் தலைவர்கள் முன்பு இருந்த பெயர்ப் பலகையில், பிரதமர் மோடியின் முன் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையிலும், மாநாட்டை முன்னிட்டு 09.09.2023 அன்று குடியரசுத் தலைவர் அளித்த சிறப்பு இரவு விருந்து அழைப்பிதழிலும் 'பாரத்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில், மாநாடு நடத்தும் நாட்டின் பெயரை ‘இந்தியா’ என்றும் ‘பாரத்’ என்றும் இரு வேறு விதமாகக் குறிப்பிட்டிருந்தது மிகத் தவறான முன்னுதாரணம். இது கூடவா தெரியவில்லை பிரதமர் மோடிக்கு? இந்தியாவில் நடைபெறும் ஜி20 மாநாட்டின் மூலம் பெரிய மாற்றம் நிகழப்போகிறது என்று பா.ஜ.கவினர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னது இந்தப் ‘பெயர் மாற்றம்’ தான் போல் இருக்கிறது. இது குறித்து தி.மு.க இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி அவர்கள் “10 வருடத்திற்கு முன்பு மோடி இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்று சொன்னதை இப்போது செய்து காட்டியுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துகள்” என்று தலைவர் கலைஞர் பாணியில் கிண்டலாகத் தெரிவித்துள்ள கருத்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பாரத் மண்டபத்தின் நுழைவு வாயில் பகுதியில் ரூ.10 கோடி செலவில் 28 அடி உயர சோழர் கால நடராஜர் சிலை பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கும் வகையில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது.







இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தால் மதச்சார்பற்ற நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஒன்றிய அரசு இதைத் தவிர்த்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக இந்தியாவின் இலட்சினையான சாஞ்சி ஸ்தூபியுடன் கூடிய அசோக சக்கரத்தை அமைத்திருக்கலாம். அதை விடுத்து உலக நாடுகள் பங்கேற்ற மாநாட்டில் மத அடையாளத்தை அமைத்தது கண்டனத்திற்கு உரியது.

கடந்தாண்டு இந்தோனேசியாவில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ஐ.நா. தீர்மானத்தை மேற்கோள் காட்டி ரஷியாவை வெளிப்படையாக விமர்சித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இந்தாண்டு உச்சி மாநாட்டில் “உக்ரைனில் மீண்டும் அமைதி திரும்பப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். பிராந்தியங்களைக் கையகப் படுத்துவதற்காக அச்சுறுத்தி, அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்” என்று ரஷியாவின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் கண்டனம் ‘போல’ தெரிவிக்கப்பட்டிருப்பது, 56” என மார் தட்டும் பிரதமரின் மாவீரம் போலும்.

உலகத் தலைவர்களின் வருகையை ஒட்டி டெல்லியின் குடிசைப் பகுதிகள் போன்ற பல்வேறு இடங்கள் பச்சை காடாத் துணியால் மறைக்கப்பட்டிருந்தது ஓர் அவலம். சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் போட்டியில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற போது இப்படி எதையும் திரை போட்டு மறைக்க வேண்டிய அவலம் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை என்பதே திராவிட மாடல் ஆட்சியின் சாதனை!

“இம்சை அரசன் 23ஆம் புலிகேசி” என்ற திரைப்படத்தில் அரசர் ஒரு மல்யுத்த வீரரின் உடலுடன் தனது தலையைப் பொருத்தி தன்னை பலசாலியாகக் காட்டும் வகையில் ஓவியரிடம் ஒரு ஓவியத்தை வரையச் சொல்வார். அந்தத் திரைப்படக் காட்சியைப் போன்று பிரதமர் மோடியை உலகின் வலுவான தலைவராகக் காட்டவே இந்த ஜி20 உச்சி மாநாட்டைப் பயன்படுத்த நினைத்தார்கள். ஆயினும் பா.ஜ.கவினர் எதிர்பார்க்கும் பலன் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்படப் போவதில்லை. நாட்டு மக்கள் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள். இனியும் அவர்களை ஏமாற்ற முடியாது. ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பா.ஜ.க. ஆட்சி 'ஸ்வாஹா'

அதிர்கிறது இந்திய ஒன்றியம், அலருநார்கள் காவிகள், "சனாதனத்தை ஒழிப்போம்" என்ற அமைச்சர் உதயநிதியின் பேச்சால்.

மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரதமர் மோடி சொல்கிறார், "சனாதனம் இந்தியாவை இணைக்கிறது" என்று. ஆனால் சனாதனம் என்றால் என்ன என்று தெளிவாகச் சொல்லவில்லை அவர்.

சாதிய ஏற்றத் தாழ்வுகளைச் சொல்லி மனித உரிமைகளைப் பறிக்கும் ஆதிக்கத்தின் பெயர் சனாதனம்.

சேரன்மாதேவி குருகுலம், கேரளத்தின் வைக்கம் போராட்டத்திற்கான காரணங்கள், சனாதனம்.

மனித இனத்திற்கு எதிரான சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்கிறார் உதயநிதி. இல்லையில்லை, சனாதனத்தைக் காக்க வேண்டும் என்று மதச்சாயம் பூசுகிறார் மோடி.

எந்த ஒரு பேசுபொருளாயினும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் அவை மறைந்து வேறு ஒரு பேசுபொருளுக்குள் போய்விடும் பா.ஜ.கவின் அரசியல், உதயநிதியால் சொல்லப்பட்ட 'சனாதனம்' என்ற சொல்லை விட்டு நகர மறுக்கிறது.

ஏனென்றால் கடந்த ஒன்பது ஆண்டுகால பா.ஜ.க வின் ஆட்சி இமாலய ஊழல்களால் நிறைந்து வழிகிறது.

அண்மையில் வெளியான சி.ஏ.ஜி அறிக்கையின் மூலம் ரூபாய் 7,500,000,000,000 ஊழல் செய்திருக்கிறது என்பது அம்பலம் ஆகியிருக்கிறது.

மதவாதம், இனவாதம், வெறுப்பு அரசியல், வன்முறை, வேலையில்லாத் திண்டாட்டம், தேர்தல் வந்தால் பொய் வாக்குறுதிகள், திரித்துப் பேசுவது, பொய் பொய்யாய்ப் பேசுவது தவிர மக்களுக்கு எதுவும் செய்யாமல் இருந்த, இருக்கும் அரசு மோடியின் பா.ஜ.க. அரசு.

இவை எல்லாம் மக்களுக்குத் தெரிகிறது. அதனால் உருப்படியாக 9 ஆண்டுகளில் செய்த செயல்களைச் சொல்ல முடியாத மோடியும், அவரின் சகாக்களும் வேறு வழியின்றி சனாதனத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

எப்படித்தான் தொங்கினாலும் 2024 ஆண்டுத் தேர்தல் நீரில் அவர்களின் பருப்பு வேகாது. பா.ஜ.க.ஆட்சி 'ஸ்வாஹா'!

வீழட்டும் பா.ஜ.க, வெல்லட்டும் இந்தியா கூட்டணி!




மதுரை மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில், அமைச்சர் உதயநிதி அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த சாமியாரைக் கைது செய்ய வலியுறுத்தி மதுரை கிரைம் பிராஞ்ச் முன்பாக 08.09.2023 அன்று மாவட்டச் செயலாளர் பி.அமர்நாத் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில இலக்கிய அணித் தலைவர், புலவர் ஜெயபால் சண்முகம் கண்டன உரையாற்றினார். பேரவைத் தோழர்கள் மருத்துவர் சரவணன், வழக்கறிஞர் இராம.வைரமுத்து, ஸ்டுடியோ சரவணன், பெரியார் மருது, பகலவன், திராவிடர் கழகம், தி.மு.கழகத் தோழர்கள் உள்ளிட்டோர் பங்கு பெற்றனர்.

# நீட் – தமிழ் மாணவர்க்கு மட்டுமல்ல இந்திய மாணவர்களின் பிரச்சனை!

**பேராசிரியர் புருனோ சந்திரசேகர்**

பன்னிரண்டு ஆண்டுகள் பள்ளியில் படித்த படிப்பு போதாதென்று மருத்துவப் படிப்பில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு நீட் என்ற நுழைவுத் தேர்வு அறிமுகப் படுத்தப்பட்டது.

காங்கிரஸ் ஆட்சியில் விருப்பத் தேர்வாக இருந்த இந்த நுழைவுத் தேர்வு, பாஜக ஆட்சியில் கட்டாயமாக்கப்பட்டது. இந்த வேறுபாடே பல அறிவு ஜீவிகளுக்கு இன்னும் புரியவில்லை.

டெல்லியிலும், மும்பையிலும், சென்னையிலும் ஒரு பெரிய தனியார் பள்ளியில் படித்த மாணவர்கள், 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்விற்குப் பிறகு ஒரு பயிற்சி நிறுவனத்தில் நீட் தேர்வுக்காகப் பயிற்சி பெற முடியும். ஆனால் கிராமங்களிலோ அல்லது மேற்குத் தொடர்ச்சி மலையின் குக்கிராமத்திலோ உள்ள மாணவர்கள் அந்த வசதியை ஒரு நாளும் பெற இயலாது.

அதனால்தான் கல்வியாளர்களும், சமூக சிந்தனை உடையவர்களும், பெண் கல்வியை ஊக்குவிக்க விரும்புபவர்களும் தொடர்ந்து நீட் தேர்வை எதிர்த்து வருகின்றனர். ஏதோ தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் மட்டுமே நீட் தேர்வை எதிர்த்து வருவதைப் போல ஒரு பொய்யான பிம்பம் கட்டமைக்கப் படுகின்றது. ஆனால் அது உண்மை இல்லை. இந்தத் தேர்வு முறை மாணவர்களின் அறிவை சோதிப்பதாக அமையாமல், அவர்களின் பயிற்சியை (Coaching) சோதிப்பதாக அமைகின்றது.

பல மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பிறகு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் முழுமையாக இதற்காகப் பயிற்சியைப் பெறுகிறார்கள். தன்னுடைய வாழ்க்கையின் பொன்னான இரண்டு ஆண்டுகளை வாலிபப் பருவத்தில் இழக்கின்றனர்.

வட இந்தியாவில் உள்ள பல மாணவர்கள் நீட் தேர்விற்காகப் பயிற்சி பெறுவதற்காக ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோட்டா நகரில் செயல்படும் பயிற்சி நிலையங்களில் தங்கிப் படித்து வருகின்றனர். அவர்களில் கடந்த ஆண்டில் 15 பேரும் நடப்பு ஆண்டில் இதுவரை மட்டும் 20 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொரு மாணவனும் ரூபாய் 20 லட்சம் வரை செலவழிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. நீட் தேர்வு மாணவர்களுக்கு மிகப்பெரிய மன அழுத்தத்தை மட்டுமே உண்டாக்குகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை.

அதன் காரணமாகவே இத்தனை தொடர் தற்கொலைகளும் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஆகஸ்ட் கடைசி வாரத்தில் எந்தப் பயிற்சி மையத்திலும் இரண்டு மாதங்களுக்குத் தேர்வு நடத்தக் கூடாது என்று மாவட்ட நிர்வாகமே உத்தரவிடும் அளவிற்குப் பிரச்சனை ராஜஸ்தானில் தீவிரமானது. அதன் காரணமாகத் தற்போது பெற்றோர்கள், மாணவர்களின் தாத்தா பாட்டிகளை அங்கு அனுப்பி வருகின்றனர். அவர்கள் மாணவர்கள் தங்கி இருக்கும் பயிற்சி மையங்களுக்கு அருகிலேயே வீடு எடுத்துக் தங்கி வருகின்றனர். வயதான காலத்தில் அவர்களுக்கு இப்படி ஒரு நெருக்கடி!

அதனால் தான் சொல்கின்றோம் நீட் தேர்வு மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் மிகப்பெரும் நெருக்கடி. மன ரீதியான தாக்குதல். சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் படிக்கக் கூடாது என்பதற்காகப் பின்பற்றப்படும் நவீன தீண்டாமையே, நீட் எனும் தேர்வு.

நீட் ஒரு பாவச்செயல்!

நீட் ஒரு பெருங் குற்றம்!

நீட் மனிதத் தன்மையற்ற ஒரு தேர்வு!

●







ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர் எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு: வெற்றிச்செல்வன், சாரதா தேவி

வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்: www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம் சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408